ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

कुग्रामवासः कुजनस्य सेवा कुभोजनं क्रोधमुखी च भार्या ।
मूर्खश्च पुत्रो विधवा च कन्या विनाग्निना सन्दहते शरीरम् ॥

சிறந்த பகவதாலயங்களும், புண்யதீர்த்தங்களும், அறிஞர்களானபெரியோர்களும் இல்லாதகிராமங்களில் வசிப்பதும்நன்மைதீமை, பாபம்புண்யம், என்கிறபகுத்தறிவுகுன்றிய யஜமானனிடத்தில் சேவைசெய்வதும், அவரவர்களின் சரீரஸ்திதிக்கு யோக்கியமான சாஸ்திரவிரோதமில்லாத ஆஹாரங்களைவிட்டு, தோன்றியவாறு காலநியமங்களும் புசிப்பதற்கருகமான பதார்த்த நியமங்களும் இல்லாமல் எச்சமயத்திலும் எல்லாவற்றையும் புசிப்பதும், எப்பொழுதும் கோபத்தால் ஜ்வலிக்கும் முகத்தையுடைய பார்யையுடன் வசிப்பதும், எத்தகைய ஹிதமான வார்த்தையைச் சொன்னாலும் கேளாத மூர்க்கனான புதல்வனையடைவதும், வீட்டில் விதவையான கன்னிகையிருப்பதும் ஒருமனிதனுக்கு நேருமாகில் அவனுடைய சரீரம் அக்னியில்லாமலே தஹிக்கப்படும்.

ஒருவனுக்கு அதிக துக்கமேற்படாமலிருக்க வேண்டுமானால் புண்யக்ஷேத்திரவாஸமும், மஹான்களுடைய ஸேவையும், சாஸ்திரீயமான சுத்த ஆஹாரமும், பதியையே தெய்வமென்று பக்தியுடனிருக்கும் நற்குணம் பொருந்திய பத்னியும், பிதுர் வாக்கிய பரிபாலன மென்னும் தர்மத்தைக் கடைப்பிடித்தொழுகும் புத்திரனும், கணவனால் அன்புபாராட்டி அவன் கிரகத்திலே வைத்து இரக்ஷிக்கப்பட்ட கன்னிகையும் இன்றியமையாதவைகளாகும். இவ்விதமுடையோர்களையே உலக வாழ்க்கையில் சுகமாயிருக்கின்றன் னென்று சொல்லலாகும்

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-௵ ஐப்பிசி-௴ ௩௰௨

சரணமடைந்தோரைப் பாதுகாப்பதே சிறந்த தர்மம்.

முதற்பாகம்.

धर्मेषु शास्त्रगदितेषु समस्तलोकैः
कार्यस्सदेति मुनिभिः प्रतिबोधितो यः ।
आर्यैरनुष्ठितमगण्यफलप्रदन्त-
मुद्दिश्य वच्मि शरणागतरक्षणाख्यम् ॥

நம்மவர்களுக்கு சாஸ்திரங்களே தர்மாதர்மங்களை நன்கு விளக்கிக்காட்டக்கூடிய சிறந்த கருவிகளாகும். அவற்றுள் லோக க்ஷேமார்த்தத்தை யுத்தேசித்துக் கூறப்பட்ட பல தர்மங்களுள் சரணாகதரக்ஷணம், அதாவது நம்மிடம் சரணாகதியடைந்தவரை அன்புடன் இரக்ஷிப்பது, என்கிற, உத்தமமான தர்மமும் அடங்கியுள்ளது. உலகில் ஜனித்த பிராணிகள் யாவும் எப்பொழுதும் சுகமாகவே யிருக்கின்றன வென்றாவது, அல்லது எப்பொழுதும் துக்கத்தையே அனுபவிக்கின்றன வென்றாவது, கூறமுடியாது. ஆனால் அவரவர்களுடைய, முற்பிறவியில் செய்யப்பட்ட நல்வினை தீவினைக்கிணங்க சுக துக்கங்களேற்படு மென்பது திண்ணம். தீவினையன்றி நல்வினையையே தன் ஆயுள் முழுவதும் இயற்றி யிருப்பவருமரிது. நல்வினையேயல்லாது தீவினையை மாத்திரம் கைக்கொண்டவரும் இருந்திருப்பார்களென, நினைக்கவும் முடியாது. பொதுவாக யாவரும் இவ்விரு கர்மாக்களையும் கலந்து தான் செய்திருப்பார்கள். ஆனால் அவைகளில்

மிகுதி, குறைவு என்கிற தாரதம்யமுண்டு. இவ்வண்ணம் செய்யப்பட்ட மிச்ர கர்மாக்களின் பயனுக சுக துக்கங்களை இந்த ஜன்மாவில் முறையே கலந்து தான், யாரும் அனுபவிக்கவேண்டும். இக்கருத்தைக் கொண்டுதான்,

कस्यात्यन्तं सुखमुपनतं दुःखमेकान्ततो वा
नीचैर्गच्छत्युपरि च दशाचक्रनेमिक्रमेण ॥

எவருக்குத் தான் சுகமின்றி துக்கமும், துக்கமில்லாமல் சுகமும் ஒரே நிலையாய் ஏற்பட முடியும். வண்டியில் செல்லும் சக்கரத்தின் மேலிருக்கும் நேமி என்னும் வட்டையானது, எப்படி அடிக்கடி கீழும் மேலும் மாறிமாறிப் போகின்றதோ அவ்விதம் பிராணிகளுக்கும் சுக துக்கங்கள் நிலையில்லாமல் அடிக்கடி மாறியே வருமென்று, கவி திலகரான காளிதாஸரும் கூறியுள்ளார் இவ்விதம் ஒருவன் முற்பிறப்பிற் செய்த தீ வினையின் பயனுக அதிக கஷ்டத்தை யனுபவிக்கு மிடத்து, நம்மை வந்து சரணுகதியடைந்தால், நம்மாலியன்றவரையில் அவனை அக்கஷ்டத்தினின்றும், பாது காப்பதே சிறந்த தர்மம். இத்தர்மத்தை யனுஷ்டிப்போர்களுக்கு வர்ணம், ஆச்ரமம், குலம், பசு, பக்ஷி,என்கிற ஒரு விதமான வேற்றுமையும் கவனிக்க வேண்டியதில்லை. நம்க்குச் சத்துருவாயிருப்பினும், சரணுகதி யடைந்தால், அவனை இரக்ஷித்தே தீரவேண்டும். இக்கருத்தைக் கொண்டுதான் தர்ம யுத்தம் செய்யும் அரசர்கள் ஒருவருக் கொருவர் ஜயம் பெறக் கருதி யுத்தத்தில் பாணம் முதலிய ஆயுதங்களால் பலவிதமாய் அடித்துக் கொண்டாலும், முடிவில் தோல்வி யடைந்த ஒருவர் சரணுகதி யடைந்தால், அவருக்கு அபயப் பிரதானம் செய்து காப்பாற்றுகிறூர்கள். முன்க்ஷணத்தில் நம்மைக் கொல்லவேண்டுமென்று ஆயுத பாணியாய் யுத்தம் செய்த சத்ருவையும் சரணுகதி யடைந்த விடத்து, இரக்ஷிக்க வேண்டுமென்றூல், மற்றவர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? ஆகையால் எவராயிருப்பினும் ஆபத்துக் காலத்தில் காப்பாற்ற வேண்டுமென்று நம்மை யடைந்தால், அவர்களை நம்மாலியன்ற வரையில் அந்த ஆபத்தி

னின்றும் பாதுகாப்பது மானிடப் பிறவியை யடைந்தவர்களின் முக்கிய கடமையாகும்.

இவ்விதம் இந்த தர்மத்தை சத்ரு மித்திரனென்கிற வேற்றுமையை விலக்கிக் கருணைபாராட்டி அனுஷ்டித்த மஹான்கள் பலருளர். அவர்களிற் சிலரை சிற்றறிவுக் கெட்டிய வரை ஈண்டு வெளியிடுகிறேன். அர்க்கவம்சத்திலுதித்த அளர்க்கனெனப் பெயர்வாய்ந்த வோர்வேந்தன் பசியின் கொடுமையால் வருந்தியவோர் கழுகினால் உணவாக அருந்தவேண்டி விரட்டப்பட்டுத் தன்னைச் சரணாகதியாகவடைந்த வோர் புறுவைப்பாதுகாக்கவேண்டி அப்புறுவின் மாம்ஸத்திற்குச் சரி இடையாகத்தன் சரீரத்திலிருந்து மாம்ஸத்தைக் கொடுத்து அக்கழுகின் பசியைத் தீர்த்துப் புறுவையும் அந்த ஆபத்திலிருந்து ரக்ஷித்தார், என்று புராணங்களிற் பிரஸித்தம். மற்றும் ரகு குலதிலகனான ஸ்ரீ ராகவன் ஸீதாபகாரியான ராவணனை ஸம்ஹாரம் செய்யவேண்டி இலங்கையினருகிற் சென்றிருக்குங்கால் சத்ருவின் சஹோதரனான விபீஷணன் தன்னைச் சரணாகதி யடைந்தவுடன் யாதொன்றையுங் கவனியாமல் அன்புடனழைத்து அபயதானம் செய்து அந்த க்ஷணத்திலேயே இலங்கா ராஜ்யத்தையும் அவருக்கு அளித்திருக்கிறார்.

(தொடரும்)

நவராத்திரி மஹோத்ஸவம்.

இம் மஹோத்ஸவத்தில் மகா குருமூர்த்தி பிரதி வருடம் ஆராதிக்கும் முறையே நடத்தியபோதிலும், இங்கு ஏற்பட்ட விசேஷம் இது. பிரதி நவராத்ரம் ஒன்பது நாட்களும் பிக்ஷை இல்லாமலிருப்பதுடன், விஜய தசமி மத்யான்னம் வரை அதாவது ஸரஸ்வதி தேவியின் உத்ஸர்ஜன பரியந்தமும் தேவபாஷை

விய ஆராதனங்களைத் தாங்களே நடத்திப் பிறகு ஸுவாஸினி பூஜையையும் முடித்துப் பிறகு, ஒன்பது தினங்களிலும் நவக்ர காராதனம் பாராயணம் செய்த பிராமணர்களிடமிருந்து தனித் தனியே அவர்களால் ஸமர்ப்பிக்கப் பட்ட விபூதிப் பிரஸாதத் தையும் பெற்றுக்கொண்டு உடனே பாராயணக்காரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் சன்மானம் செய்யும்படி ஆக்ஞாபித்தனர். பிறகு சந்தரமௌளீசுவரர் திரிபுரசுந்தரியின் ஆராதனத்தைச் செய்துமுடித்துப் பிறகுஸுவாஸினி களுக்கும்பிராமணர்களுக் கும்முறைப்படி ஸந்தர்ப்பணம் தொடங்கிற்று. போஜனம்செய் யும்போதே ஸுவாஸினிகள் ஒவ்வொருவருக்கும் ரவிக்கைத் துண்டு வழங்கப் பெற்றது. சுமார் 500 ஸுவாஸினிகளுக்குக் குறையாமல் பெற்றுக் கொண்டனர். இவ்விதம் அதி விமரிசை யாய் லோகக்ஷேமார்த்தம் ஜகதாசார்யர்களால் நடத்தப்பெற்ற இம் மகோத்ஸவத்தில் குரு பக்த சிகாமணி என்று ஸ்ரீ ஸன்னி தானத்தில் திரு நாமம் பெற்ற நான்காவது வருணத்தவரான ஓர் பக்தனின் மகிமையை இங்கு கூறுமல் விட்டால் நான் பாபி யாவேனென்று கொண்டு, அவரது மகிமையைச் சற்று வரை கின்றேன். இந்த பக்தன் திரிசிர புர வாசி. சந்திர மௌளீசுவரர் இவருக்கு ஏராளமான பாக்கியம் கொடுத்திருக்கின்றனர். அப் பொருள் நமக்கு சந்திர மௌளீசுவரரால் தான் கொடுக்கப் பட் டிருக்கிறதென்பதைத் தான் நன்ருய் அறிந்தவர். இவருக்குப் பிதா இருக்கின்றனர். இவர் பிதாவுக்கும் செய்யும் கைங்கர்ய மானது, முற்காலம் பிதிரு சுச்ருஷைதான் நமக்கு மேலானது. அதிலும் பெரிய தர்மம் யாதொன்றுமில்லையென்று தீவிர நிச்ச யம் கொண்டு ஸமஸ்த ஸித்தியையும் அதன் மூலமாகவே பெற்ற தர்ம வியாதன் என்ற வேடனும், இவ்விதம் தான் இருந்திருப் பானென்பதை இது நன்கு விளக்கிக் காட்டுகிறது. இவர் செய் யும் பிதிரு சுச்ருஷைகளைக் கேட்டும் நேரில் நான் பார்த்தவை களில் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். இவர் தகப்பனு ருக்கென்று தனியாய் ஒரு குதிரையும் வண்டியும் வைத்திருக் கிருர். அவ்வண்டியில் ஒருபோதும் தான் ஏறுகிறதில்லை. அக்கு

திரையையும் உபயோகிக்கிறதில்லை. வேறொருவரும் அந்த வண்டியிலேறக் கூடாது. அவர், வண்டியில் வெளியிற் புறப்படும்போது, கூடஇருந்து வணக்கமாய் அவரை வண்டியிலேறச் செய்து, வண்டி புறப்படுமுன் குதிரைக் காரனை ஸாவதானமாய்ப் போய் விட்டு வாவென்றனுப்புவதும், வரும்போது எதிர் கொண்டு நிற்பது ஒன்றே பார்ப்போர் மனதைக் கவரச் செய்யும். இந்த பக்தன்

दानं भोगो नाशस्तिस्रो गतयो भवन्ति वित्तस्य ।
यो न ददाति न भुंक्ते तस्य तृतीया गतिर्भवति ॥

பணத்திற்கு, கொடுத்தல், அனுபவித்தல், அழிதல் என்று மூன்று வழிகளுண்டு. அதை எவன் கொடுக்கிறானில்லையோ, அனுபவிக்கிறானில்லையோ, அப்படிப்பட்ட பணத்திற்கு மூன்றுவது வழி தானுப் ஏற்பட்டுவிடும் என்ற சுலோகத்தின் கருத்தை உட்புகுந்தாராய்ந்தவரென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஏனெனில், பணம் உள்ளவனென்றால் அதைத் தன்னிஷ்டப்படி இந்த இரண்டு வழிகளில் தான் செலுத்தலாம். அப்படிச் செலுத்தாவிடில், நாசம் என்ற மூன்றுவது வழி பணத்தின் சொந்தமான வழியாகையால் அது இவனைக் கேளாமலே போய் விடுமென்பதைத் தெரிந்து கொண்டவர். இவர் ஜகதாசார்யர் முதலில் தாடங்கப் பிரதிஷ்டைக்கு விஜயம் செய்த சமயம் முதல், நாளது நவராத்திரி முடியுமட்டும் அவர்களை உத்தேசித்துச் செலவிட்டிருக்கும் பொருள் மட்டும் சுமார் 20000 ரூ இருக்குமென்று சொல்லுகிறார்கள். இவ்வளவு ரூபாய் செலவிட்டதற்காக நான் புகழவில்லை. அவரது நடத்தையும் பக்தியுமே மெச்சத்தக்கது. அவர் ஸன்னிதானத்தின் தரிசனத்திற்குத் தனிமையாய் வருவதும், வெளியில் தூரத்திலிருந்தே ஸேவிப்பதும் உட்காரச் சொன்னபோதிலும், உட்காராமலே நிற்பதும் எனக்குப் பாததூளியின் அனுக்கிரகம்தான் வேண்டுமே யொழிய மற்றதை விரும்பவில்லையென்றும் சொல்வதே வழக்கம். இவரது பக்தியைப்

யான ஸம்ஸ்கிருதத்தாலேயே வியவகாரம் செய்வார்கள். இவ்வருடம் அதுவுமில்லாமல், பரம மௌன விரதத்தையே ஒன்பது நாளும் சாதித்தனர். இதைப் பார்த்த பக்தர்கள் யாவரும் ஆச்சரியமடைய வில்லையென்பதுண்டோ. முக்யமாய் அந்தரங்கத்தில் தரிசனம் செய்து, ஸம்பாஷிக்கப் பிரியம் கொண்ட பக்தர்களோடு மட்டும் ஜாடைகளால் தமது பதிலை அநுக்கிரகித்தனர். அதிலும் தெரியாமலிருந்தால், தான் முக்கியமாய்த் தெரியப்படுத்த வேண்டுமென்று திருவுள்ளத்தில் பட்டால் மட்டிலும், இரண்டொரு எழுத்து மட்டிலும் பூமியில் எழுதிக்காட்டுகிறது. அதிலும் தெரிந்து கொள்ளாமற் போனால், போகவேண்டியது தான். ஆனால் அவ்விதம் ஒருவரும் போகவில்லை. இதைப் பார்த்தவுடன் நான் முதலில் ஆகா! பிரதி வருடமும் தேவியின் உத்ஸவகாலமான இந்நாட்களில் ஸம்ஸ்கிருத ஸரஸ்வதி மட்டிலும் தனிமையாய்ப் பரம குருவின் முக கமலத்தில் தடங்கலின்றி நர்த்தனம் செய்து கொண்டிருந்தாளே, அவளுக்குக் கூட அபாக்கியம் வந்து விட்டதோ என்று, என் அற்ப புத்தியால் நினைத்தேன். பிறகு இது சரிதான். துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி இம் மூன்று பராசக்திகளின் அநுக்கிரகத்தையும் ஸமமாய்ப் பெற வேண்டுமாயின் மூவரையும் ஸமமாய்த்தான் ஆராதிக்க வேண்டும். ஸரஸ்வதியை மட்டிலும் விசேஷமாய்க் கொண்டாடவேண்டாம் என்று தமது ஹிருதய கமலத்திலும் மூவர்களையும் தியானித்துக் கொண்டு தமது வாக்கையும் அந்தர் முகமாய்ச் செலுத்தியிருக்கின்றனரென்று தீர்மானம் செய்து கொண்டேன். இவ்விதம் இம்மகா விரதத்தை அநுஷ்டித்து வழக்கம் போல் ஸரஸ்வதி பூஜா தினத்தில் காலையில் சண்டீ ஹோமத்தின் பூர்ணாஹுதி முடியுமட்டும் ஹோம சாலையில் ரித்விக்குகளுக்கெதிரில் நின்று அக்னி பகவானையும், சண்டியையும், ஸேவித்து விட்டுப் பிறகு குமாரி, சக்தி, கல்யாணி, ரோகிணி, காளி, சண்டி, சாம்பவி, துர்க்கா, ஸுபத்ரா என்கிற 9 நாம தேயமுள்ள தேவிகளை முறையே இரண்டு வயது கன்னிகை முதல் ஒன்பது கன்னிகைகளை உட்கார்த்தி, அவர்களிடம் ஆவாஹனம் பூஜை முத

பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாமாயினும், அதிகமாய் வரைந்தால், ஒருசமயம் இப்பத்திரிகையில் வெளியாயிருப்பது கர்ண கர்ணிகையாய் அவருக்கு எட்டினுல் ஒருசமயம் வருத்த முறுவாரென்று பயந்து நிறுத்துகிறேன். இவ்வளவு சொன்ன பிறகு இவரது நாமதேயத்தை வெளியிடாமற் போனுல், மிகவும் அனுசிதமாதல்பற்றி அதையும் வெளியிடுகிறேன். இவருக்கு கந்தஸாமிசேர்வை என்று பெயர். இந்தபக்தனுக்கு குருபக்தசிகாமணி என்று பெயர் கொடுக்கவேண்டுமென்று அநேக ஆஸ்திகர்கள் ஆலோசித்துப் பிறகு எல்லோரும் ஸன்னிதானத்திற்சென்று வணங்கி இவ்வித பிருது இவருக்குக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற் கிணங்கி ஸன்னிதானத்திலும் ஸ்ரீ முகம் கொடுக்கும்படி ஆக்ஞை ஏற்பட்டது. இவ்வளவால் நாம் தெரிந்து கொள்ளவேண்டியது யாதெனில் வியாஸரது வாக்கால் தர்மவியாதன் புகழ்பெற்றதுபோல் ஸன்னிதானத்தின் முன்னிலையில் இவர் குருபக்த சிகாமணி என்று அழைக்கப்பட்டாரென்றும் ஆகவே **भक्तिः किं न करोत्यहो** ஆச்சர்யம் பக்தி என்னதான் செய்யாது என்ற நியாயப்படி நாமும் பக்தியால் முன்னுக்கு வர முயற்சிக்க வேண்டுமென்பது தான், இனி அடுத்து வித்யாஸ்தானத்தையும் ஆன்னிகஸ்தானத்தையும் பற்றி வெளியிடுகிறேன்.

(தொடரும்)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

மறு பிறப்பு.

௫-வது ஜீவன் ஜலமயமா ?

(௬௨௬வது பக்கத்தொடர்ச்சி.)

தூமாதி மார்க்கம் செல்பவரே சந்திரலோகம் சென்று போகங்களை அனுபவித்து தன்புண்ய கன்மம் குறைந்தவுடன் பூமிக்கு வருகிறார்கள். இவ்வபிப்பிராயத்தையே கீதையில்,

अग्निर्ज्योतिरहश्शुक्लः षण्मासा उत्तरायणम् ।
तत्र प्रयाता गच्छन्ति ब्रह्म ब्रह्मविदो जनाः ॥
धूमो रात्रिस्तथा कृष्णः षण्मासा दक्षिणायनम् ।
तत्र चान्द्रमसं ज्योति र्योगी प्राप्य निवर्तते ॥

அக்னி, ஜ்யோதி, அஹஸ், சுக்லம், ஆறுமாதங்கள், உத்தராயனம் இவைகளிற் சென்றவர்களான பிர்ம வித்தான மனிதர்கள் பிர்மத்தை அடைவார்கள். தூமம், ராத்திரி, கிருஷ்ணம், ஆறு மாதம் தக்ஷிணாயனம் இவைகளிற் சென்ற யோகி சந்திரனை அடைந்துவிட்டுத் திரும்பி வருகிறான் என்றார். இனி சாந்தோக்யோபனிடதத்திலும் எவர்கள் காட்டில் சிரத்தை தவம் என்று உபாஸிக்கின்றனரோ அவர்கள் அர்ச்சிஸ்ஸை அடைவார்கள். அதினின்றும் அஹஸ்ஸையும், அஹஸ்ஸிலிருந்து ஆபூர்யமாண பக்ஷத்தையும், ஆபூர்யமாண பக்ஷத்திலிருந்து உதக் என்று ஆறு மாதங்களையும் ஆறு மாதங்களிலிருந்து, ஸம்வத்ஸரத்தையும் ஸம்வத்ஸரத்தினின்றும், ஆதித்யனையும் ஆதித்யனிடமிருந்து, சந்திரனையும் சந்திரனிடமிருந்து, வித்யுத்தையும் வித்யுத்திலிருந்து, அமானவனென்னும் புருஷன் இவர்களை பிர்மத்தையும் அடையச்செய்கிறான் என்று ஞானிகளது கதியையும் இனி கிராமத்திலிருந்துகொண்டு இஷ்டாபூர்த்தம் தத்தம் என்று எவர்கள் உபாஸிக்கின்றனரோ அவர்கள் தூமத்தை அடைவார்கள்.

(தொடரும்)

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

தஞ்சை வர்ணாச்ரமதர்ம மகாநாட்டில் சேங்காலிபுரம்
பிரும்மஸ்ரீ கே. வைத்தினாதசாஸ்திரிகளால்
செய்யப்பட்ட வேதப்பிராமாண்யம் என்ற

உபந்யாஸத்தின் சுருக்கம்.

कृष्णः करोतु कल्याणं कंसकुञ्जरकेसरी ।
कालिन्दीजलकल्लोलकोलाहलकुतूहली ॥

ஆஸ்திகர்களே! வர்ணாச்ரம தர்மம் என்னும் பதத்தால் சொல்லப்பட்ட பிராமணாதி ஜாதிகள், பிரும்மசர்யம் முதலிய ஆச்ரமங்கள் இஃது ஜாதிகளுக்கும் ஆச்ரமங்களுக்கும உரிய தர்மங்கள், ஆகிய இவை வேதமென்னும் முக்கிய பிரமாண த்தால்சொல்லப்பட்டவைகளே. எனவே, வேதப்பிராமாணயத் தை ஈண்டு முக்கியமாய் பேச யான் முன் வந்திருக்கிறேன். வேத மென்னும் சப்தரூபப்பிரமாணம் நமக்கு விளங்காத பொ ருளைத் தானாகவே நன்கு விளக்கிக்காட்டும். ஈசுவரனிடத்தில் இருக்கும் தனம் வேதமேயாம். அத்தகைய ஐசுவரியத்தை யனுபவிக்கக்கடமைப்பட்டவர்களும் மாந்தர்களேயென

“मनुष्याधिकारत्वाच्छास्त्रस्य”

என்று பிரும்மஸூத்திரத்தின்கண் கூறப்பட்டுள்ளது. அப் படிப்பட்ட வேதரூபப்பிரமாணம் உத்தம மென்பது விசாரத் தால் நன்கு வெளியாகும். நிற்க, வேதங்களைப்பற்றியும், வேதப் பிராமாண்யத்தைப்பற்றியும் தற்காலத்தில் பலர் எழுப்பும் சிற் சிலஐயவினாக்களை எழுதி முறையே அவற்றிற்குச் சமாதான மும் கூறுவாம்.

சங்கை:— வேதங்கள் எவனோ ஒரு புருஷனாலியற்றப் பட்ட வாக்கியங்களேயன்றி நித்தியமான சப்தங்களாக எவ் வித நாம் எண்ண முடியும்?

சமாதானம்:— உலகில் பாரதம், ராமாயணம் முதலிய கிரந்தங்கள், வியாஸர், வால்மீகி முதலிய ரிஷிகளால் இயற்றப் பட்டன வென்று எவ்விதம் தெரியவருகின்றதோ, அவ்விதம் வேதத்தை இயற்றிய கர்த்தாவைப்பற்றிய எந்தப் பிரமாண

மும் நமக்குக் கிடைக்காததுபற்றி அது ஒருவனல் செய்யப் பட்டதல்ல. அன்றியும் அநுபவத்தாலேற்படும் யுக்தியாலும் வேதகர்த்தா ஒருவன் இல்லையெனத் துணிந்து கூறலாம். அநு பவத்திற்கு விரோதமான யுக்தி பிரமாணமாகமாட்டாதென் பது பிராமாணிகர்கள் அறிந்த விஷயமாதலால், தற்காலம் வேத மானது, எப்படி ஓர் குருமுகத்தால் கற்பிக்கப்பட்டு சீடனு லும் அம்மாதிரியே உச்சரிக்கப்பட்டு வருகின்றதோ, அப்படி யே எக்காலத்திலும் இருந்திருக்கின்றதென்று தான் நாம் எண்ணவேண்டும். மேலும், மிகச்சதாரணமான நூற்களை இயற்றும் நூலாசிரியர்கள் கூட தங்கள் தங்கள் பெயரையும் கௌரவப் பட்டங்களையும் போடாமல் எழுதுவதைக்காணோம். இங்ஙனமிருக்க ஸர்வார்த்தங்களையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெளிவுர உணர்த்திக்காட்டும் வேதத்தில் அப்படிப் பட்ட ஒருவரும் நான் செய்தேனென்று சொல்லிக் கொள்ளா ததால் ஒருவராலும் வேதம் செய்யப்பட்டதல்ல வென் தில் ஒருசிறிதும் சந்தேகமில்லை.

"यो ब्रह्माणं विदधाति पूर्वं, यो वै वेदांश्च प्रहिणोति तस्मै"

என்ற வேதவசனத்தை நன்கு ஆராயுமிடத்து "ஈசுவரன் எப் பொழுதுமிருக்கும் வேதங்களை பிரமதேவனிடம் அனுப்பினர்" எனப் பொருட்படுவதால் வேதம் நித்தியமெனக் கருதப்படு கின்றது. இதற்கிணங்கவே, தர்மஸூத்திரத்தின் கருத்தை நன்கு விளக்கிக்காட்டிய ஆசார்யசபரஸ்வாமி யென்னும் மஹா னும், "வேதமானது புருஷனுலியற்றபட்டதல்ல; ஏனெனில் புருஷபுத்தி, தோஷத்தோடு கூடியதால் தோஷமற்ற வேதத் தில் தோஷத்தை அங்கீகரிக்க முடியாது" என விசதமான யுக்திகளால் தீட்டிக்காட்டியுள்ளார். இவ்விதமே ஸ்ரீ குமாரி லபட்டரென்னும் வார்த்திகக்காரர்,

"वेदस्याध्ययनं सर्वं गुर्वध्ययनपूर्वकम् ।
वेदाध्ययनसामान्यादधुनाऽध्ययनं यथा ॥"

என்னும் பாசுர வார்த்திகத்தால் வேதம் புருஷநிர்மித மல்ல வென்றும் ரிஷிபுங்கவரான வேதவ்யாஸர் "अत एवच नित्यत्वं"

என்றபிரும்ம ஸூத்திரத்தால் வேதம் புருஷ கிருதி விஷய மல்லவென்றும் நன்கு வெளியிட்டுள்ளார். ஆகவே ஈசுவரன் பூர்வகல்பத்திலுள்ள வேதத்தை இக்கல்பத்தில் உபதேசித் தருளினர் என்பதே எமது முடிவான ஸித்தாந்தம்.

2 சங்கை:— அந்தந்த கல்பத்திலும் மறைகள் புதிது புதிதாகவே உண்டாகின்றனவென்றே நாம் சொல்லலாம். அவற்றின் பொருளும் வேறுபடக் கூடும். அவ்வச்சமயங்க ளில் ஒவ்வொரு ஸங்கேத தர்மத்தைக் காட்டியவர்களே ரிஷிக ளெனக் கருதப்படலாம். வேதத்தில் ஓதப்பட்டுள்ள தரும மும் காலத்திற்குத் தக்கவாறு மாறுதலை யடையக்கூடும். உதாரணமாக ஒரே சிரார்த்தமென்னும்தர்மம் பகலில் செய் தால் தருமமெனவும் இரவில் செய்தால் அதர்மமெனவும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். அவ்விதமே மதுபர்க்கத் தில், பசுவதம் யுகாந்தரத்தில் செய்தால் தருமமெனவும் கலி யுகத்தில் செய்தால் அதர்மமெனவும் சாஸ்திரங்களின் கண் சொல்லப்படுகின்றது. வாசிஷ்டம் என்னும் புராணத்திலுள்ள,

"सुराप ब्राह्मणं तात निषिद्धसुरशूद्रकम् ।
स्वैरवृत्तसतीकञ्च कश्चित् सर्गं स्मराम्यहम् ॥"

என்ற இப்பாசுரத்தாலும் "பிராமணன் மத்யபானம் செய்வது தர்மம்; சூத்திரர்கள் மத்தியபானத்தை விலக்கியது தர்மம்; ஸ்திரீகள் தங்களுக்குத் தோன்றியவாறிருத்தல் தர்மம் என்றி ருந்த கல்பத்தை யான் அறிவேன் என பூஸண்டன் என்னும் காகம் சொல்லியதாகத் தெரியவருகின்றது. ஆகையால் தர்மா தர்மமாறுதலும் வேதமாறுதலும் எப்பொழுதும் உண்டென்று நிச்சயிக்கலாம். சமீபகாலத்திலும் ஸ்ரீ லோகமான்யதிலகர் முதலிய நவீன நாகரீக நிபுணர்கள் சுமார் 2000 வருஷங்க ளுக்கு முன்புதான் வேதம் எற்பட்டதென்றும் அதற்கு முன் கிடையாதென்றும் ஆராய்ந்து கண்டுபிடித்ததாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர்.

சமாதானம்:— மறைகளும், அவற்றின் பொருளும் எக்காலத்திலும் மாறுதலையடைகின்றதில்லை. உலகம் மாறுகிறதில்லை. ஆனால் சாதாரணமான மனிதர்களுடைய புத்தியில் மாத்திரம் சிற்சில மாறுதல்கள் உண்டாகின்றன. அது எவ்விதமெனில், உலகத்தைச் சற்று கவனிப்போம்.

"यथा ऋतुषु लिङ्गानि नानारूपाणि पर्यये ।
दृश्यन्ते तानि तान्येव तथारूपा युगक्षये ॥"

அதாவது ஒவ்வொரு ருதுக்களிலும், எந்தெந்த வஸ்துக்கள் எவ்விதம் காணப்படுகின்றனவோ, அவ்விதமே மறு ருதுக்களிலும் காணப்படுகின்றன. அன்றியும், அந்தந்த பீஜங்களிலிருந்து அந்தந்த வஸ்துக்கள்தான் உண்டாவதாகவும், தெரியவருகின்றதேயன்றி வேறு விதமாகக் காணப்படவில்லை. இத்தகைய அநுபவத்தையும் ஒருவராலும் மாற்ற இயலாது. இங்ஙனம், அசேதனங்கள் [அசையா இயற்கை பொருள்கள்] முதல் மாறுபாட்டையடையாத வ்யவஸ்தையடைந்ததைப் பார்த்துமனிதர்களின் புத்திமட்டில்அவ்விதவியவஸ்தையை(ஏற்பாட்டை) மீறுவது மிக்க ஆச்சர்யமே! ஐம்புலன்களாகிய கண் செவி முதலிய கருவிகள் வ்யவஸ்திதமான விஷயத்தைக் கிரகிப்பதைக் கண்டறிந்த ஒருவன், தன் மனம் தடுமாறுவதை மாற்றிக்கொள்ளலாம். இக்கருத்தையே ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள்

"खंवा मुष्टिनाकृष्टुं यतेत । पद्भ्यां पलायितुं अपारयमाणो जानुभ्यामपि रंहेत"

என்றவசனங்களால் "ஓர்விதவரையறையின்மையை(अव्यवस्था) புலன்களுக்கு ஏற்படுத்திய மனிதர்கள் ஆகாயத்தைத்தன் கரத்தால் தகையலாம்; முழங்கால்களாலும் அதிவேகமாயோடலாம்" என்றிவ்வாறு வியவஸ்தையின் அவச்யத்தை நன்கு விளக்கினார். மேலும், வ்யவஸ்தையை அங்கீகரிக்காவிடில் தனக்கே கெடுதல்கள் உண்டாகும். எவ்விதமெனில்,

ஓர் பதவியை அடைய விரும்பும் ஒருவனுக்கு, அதற்கு இன்றி யமையாததான ஓர் தர்மம், கல்வி இவையில்லாவிடில், அவன் முன்னேற்றமடைவது எங்ஙனம்? ஆகவே, அதற்கு வேண்டிய கல்வியிற் தேற்சியடைந்து அதன்படி ஒழுகுவானேல், அப்பொழுது தான் அவன் அப்பதவியை அடையமுடியும். இவ்விதம் ஓர் வித ஏற்பாடானது (व्यवस्था) அவச்யமெனக் கருதுபவர்கள், வேதத்தில்மாத்திரம் மாறுதலைச் சிந்திப்பது ஸாஹஸமேயன்றோ! அந்தந்த யுகங்களுக்கும், அந்தந்த மனிதர்களுக்கும், அவர்களின் சரீர இயற்கைக்கும் தக்கவாறே சாஸ்திரங்களின் கண் தருமங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஒரு வஸ்துவை ஓரே காலத்தில் தருமமென்றும் அதர்மமென்றும் நம் சாஸ்திரங்களில் முன்னுக்குப்பின் முறணாகச் சொல்லப்படவில்லை. இதற்கிணங்கவே, முற்கூறப்பட்டுள்ள வாசிஷ்ட வசனத்திற்கு உரை கூறுமிடத்து ஸ்ரீ மீமாம்ஸா நியாயப்படி அப்புராணத்திற்குமட்டிலும் தாத்பர்யத்தைக் கண்டுபிடிக்க, வேண்டுமேயன்றி தத்தம் புத்திக்குத்தோன்றியவாறு பொருட்படுத்துவது அறிஞர்களுக்கு அழகல்ல. சப்தரூபமான பிரமாணம் தாத்பர்ய விருத்தியால் பொருளைவிளக்கும். அதற்கு ஆறுகாரணங்களை பட்டபாதர் கூறுகின்றார். அவையாவன

"उपक्रमोपसंहारौ अभ्यासोऽपूर्वता फलम् ।
अर्थवादोपपत्ती च लिंगं तात्पर्यनिर्णये ॥"

என்றவாறு, ஓர் கதைக்குப் பொருட்படுத்த வேண்டுமிடத்து ஆரம்பமும் முடிவும் ஓரேவிதப் பொருளைப் புகட்டி நிற்குங்கால் இடையிலுள்ள எல்லாவசனங்களும் அவற்றுடன் சேர்ந்து அதே விஷயத்தைத் தெரிவிக்கும், அவ்விதமே, வாசிஷ்ட புராணத்திலும் முதலில் உலகம் விசித்திரமென ஆரம்பித்து, மத்தியில் இக்கதையைச் சொல்லி, முடிவிலும் உலகம் விசித்திரமென்றே கருதப்படுகின்றதாகையால், உலகம் விசித்திரமென்றே ஓரேஅர்த்தமே ஏகவாக்கியத்தால் கூறப்படவேண்டியதே,யன்றி, வேறுவிதம் பொருட்படுத்துவது எவ்வாற்றானும்

அமையாதென்க, நிற்க, வேதங்களின் உற்பத்தி சுமார் 2000 வருஷங்களாகவே இருக்கலாமெனக் கூறுவதும் மிக்க ஆச்சர்யமேயாம்! பகவத்கீதாகாலத்திற்கு முன்பே வேதமுண்டென கீதாவ்யாக்கியான மூலமாய் ஒத்துக் கொள்ள நேரிடுவதை முற்றிலும் மறந்து 2000 வருஷங்களுக்கு முன்னர் வேதங்கள் இல்லையெனச் சாதிப்பது நம்பத்தக்கதல்ல. பிரமாணமில்லாமல் தங்கள் புத்தியை மட்டில் நம்பியவர்களுடைய யுக்தியும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஜைமினி வேதவ்யாஸர் முதலியவர்களியற்றிய ஸூத்திரங்களுக்கு பாஷ்யம் செய்த ஆசாரியசபரஸ்வாமிகள், ஸ்ரீ சங்கரர், பட்டபாதர், ஸ்ரீ ராமானுஜர் ஆநந்ததீர்த்தாசாரியர் முதலிய புனிதர்கள் இவ்விஷயத்தை பூர்வபட்சம் செய்து ஸித்தாந்தம் செய்திருக்கின்றபடியால் அதையே மீண்டும் விஸ்தரிப்பது பயனற்றதென விரிவிற்கஞ்சி விடுகின்றேன். அன்றியும், ஸ்ரீ சங்கராசாரியர் திருவாய்மலர்ந்தருளியபடி, அறிஞனுயுள்ள ஒருவன் மூடத்தனத்தால் ஏதாவது ஒருமதத்தை நம்பினுல் மிக்க அநர்த்தங்களுக்குள்ளாவான் ஆதலால், வேதம் பிரமாணச்ரேஷ்ட மென்பதிற் ஒரு சிறிதும் சந்தேகமில்லை. அதில் கூறப்பட்டுள்ளபடியே நாம் தர்மங்களை யனுட்டிக்கவேண்டுவதும் இன்றியமையாததாகும். பிருஹதாரண்யமென்னும் சுருதியின் மூன்ருவது அத்தியாயத்திலும் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரனென்னும் நான்கு வர்ணங்களும், பிரும்மசர்யம், கார்ஹஸ்தியம், வானப்ரஸ்தம், ஸன்யாஸம் என்னும் நால்வகையாச்ரமங்களும், முறையே அவற்றிற்குற்ற தர்மங்களும் தெளிவுற உணர்த்தப்பட்டுள்ளன. இத்தகைய பிரமாண பூதமான வேதத்தை நாம் அநியாயமாய் இழந்தபடியாற்றுன் தற்காலம், நம் தேசத்திற்கு ஆபத்துக்களும், நம் தேசமக்களும், முறையே அவற்றிற்குற்ற தருமங்களும் தெளிவுற உணத்தப்பட்டுள்ளன. இத்தகைய பிரமாண பூதமான வேதத்தை நாம் அநியாயமாய் இழந்தபடியாற்றுன், தற்காலம், நம் தேசத்திற்கு ஆபத்துக்களும், நம் தேசமக்களுள் ஒருவருக்கொருவர் கலகங்களும் உண்டாகிவிட்டன. ஸ்ரீ குமாரிலபட்டர் புத்தர்களை ஜயிக்கும்பொழுது தனக்குநிகழ்ந்த

ஆபத்தை விலக்கிக்கொள்ள " यदि देवा: प्रमाणं " அதாவது "வே தங்கள் பிரமாணமாகவிருந்தால் என்னை ரக்ஷிக்கட்டும் என்றார்" அவருக்கு யாதொருவிதமான அபாயமும் நேரிடவில்லை. ஆனால், " यदि " என்ற சப்தத்தால் மிகப் பிரமாணபூதமான வேதத்தை "பிரமாணமாகவிருந்தால்" எனச் சந்தேகித்ததற்காக அவ்வன்னோர் தன் ஒரு நேத்திரத்தை இழந்துவிட்டாரெனத் தெரியவருகிறது. ஆகையால் வேதத்தை நியாயமார்க்கத்தால் கற்றறிந்து அதன்படி பின்பற்றாதவரை நம் பாரதமக்களுக்கு பரஸ்பர கலஹமும் அவநம்பிக்கையும், தான் கெடுவதும், பிறரையும் கெடும்படி தூண்டுவது இன்னும் சொல்லவொண்ணாத எத்தகைய கஷ்டங்களும் உண்டாகுமோ தெரியவில்லை; ஆகையால் பாரதீயஜனங்களே! நீங்கள் இப்பொழுதே வேதத்தை நம்பி அதிற்கூறப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மங்களைக் கைப்பற்றுங்கள். ஸ்ரீ கீதாசார்யனும் கடைசியில் அர்ஜுனனுக் குபதேசித்தருளிய, ' तस्मात् शास्त्रं प्रमाणं ते ' என்ற வசனங்களால், 'ஓ அர்ஜுனா, என்னிடத்தில் உனக்கு நம்பிக்கையிருக்குமாகில் வேதத்தை நம்பு; அதில் சொல்லப்பட்டுள்ளபடி உன் ஜாதிக்குற்ற தர்மங்களைச்செய்யக்கடவாய். வேறு ஜாதிக்குச் சொல்லிய தர்மம் உனக்கு பயத்தைக்கொடுக்கும் (परधर्मोभयावहः) தங்கள் தங்கள் வர்ணாச்ரமதர்மங்களால் பகவானை ஆராதித்தால் சித்தி அவசியம் உண்டாகும்' என்றிவ்வாறு 18வது அத்தியாயத்தில் (இதை ஜட்ஜிமெண்ட் அத்தியாயமென்னலாம்) அர்ஜுனனுக்கு வற்புறுத்தியிருக்கின்றார். அன்றியும், கீதாசாஸ்திரத்தை விமர்சனம் செய்துபார்க்குமளவில் வேதோக்தமான வர்ணாசிரம தர்மமே மோக்ஷத்திற்கு முக்கிய காரணமெனவும் வேறு வழி கிடையாதென்றும் நன்கு துலங்கும். எனவே ஸகல சிரேயஸ்ஸுக்கும் முக்யகாரணம் வேதமேயாம். அஃதே, தத்வாவேதக ப்ரமாணம், எனப்பெரியோர்கள் நிச்சயித்த விஷயம், ஆகையால் வேதமென்ற முக்கியப்பிரமாணத்தால் ஈசுவரனுடைய பிரஸாதத்தையடைந்து மோக்ஷமென்ற பெரும்பேறையும் அடைவோமாக.

கே. வைத்தியநாத சாஸ்திரிகள்.